ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்
புளியங்குளம்.

ஆசிரியர் சேவை முதலாவது வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சை

# இதவடிவம் 06

## உற்பத்தித்திறன் (செயற்றிறன்) – ஆக்கத்திறன் மற்றும் தர மேம்பாட்டு நுட்ப முறை


**சந்திரகுமார் திலீப்காந்த்**
**வ/ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயம்**
**PTC/467**


LIVEWORKSHEETS

**01. வகுப்பறை கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் ஆக்கத்திறனும் தரம் மிக்கதாகவும் இடம்பெறுவதற்கு ஆக்கத்திறன் மிக்க ஆசிரியர் ஒருவருக்கு தேவையான அடிப்படை அம்சங்களை விளக்கி, உங்கள் பாடசாலை வகுப்பறையோடு தொடர்புபடுத்தி ஆராய்க?**

"***குறிப்பிட்ட வளங்களைப் பயன்படுத்தி எத்தகைய வெளியீடு பெறப்படுகிறது***" என்பதே ஆக்கத்திறன் அல்லது உற்பத்தித் திறன் எனப்படுகிறது. பாடசாலையில் கற்பித்தல் கற்றல் செயற்பாடுகள் ஆக்கத்திறனாக காணப்பட்டால் அது மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தை நிச்சயம் அதிகரிப்பதாகக் காணப்படும். அந்தவகையில் ஆக்கத்திறன் மிக்க ஆசிரியருக்கு இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்களை நோக்கும்போது, ஆசிரியரொருவர் தலைமைத்துவமும் மாணவர்களை முகாமை செய்யக்கூடியவருமாக இருத்தல் வேண்டும். வகுப்பறையிலுள்ள மாணவர்ளை இனங்கண்டு அவர்களுக்கேற்ப திறன்களை வளர்க்கச்செய்து எமது பாடசாலையின் இலக்கான சிறந்த கல்விச்சமூகத்தை உருவாக்கவேண்டிய கடமை ஆக்கத்திறன் மிக்க ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

மாணவர்களை விரும்பி கற்றலில் ஈடுபட வைப்பதே சிறந்த முகாமையாகும். ஆசிரியர் என்பவர் கற்றுக்கொடுப்பதை விட மாணவர்கள் சுயமாகக் கற்பதற்கு ஏற்ற வகுப்பறைச் சூழலை உருவாக்கிக்கொடுப்பவராக இருத்தலும் ஆக்கத்திறனுள்ள ஆசிரியருக்கு இருக்க வேண்டியப பண்புகளில் ஒன்றாகும். மாணவர்களுக்கு குழு முறையில் கற்பிப்பதாயின் அதற்கேற்றவாறு வகுப்பறைகளை ஒழுங்கமைத்தல மற்றும் தளபாடங்களை நேர்த்தியாக அடுக்கிவைத்தல் என்பவற்றில் கவனம் செலுத்தல்வேண்டும். இவ்வாறான விடயங்கள் எனது பாடசாலையில் மிக ஒழுங்கான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுவதை அவதானிக்கமுடியும்.

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் ஆக்கத்திறனுடன் காணப்பட்டாலே அதிக விளைதிறனைப் பெற்றுக்கொள்ள முடியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாடானது ஆக்கத்திறனாக அமைய ஆசிரியரின் திட்டமிடலும் முகாமைத்துவமும் மிகவும் அவசியமாகும். அந்த வகையில் ஆக்கத்திறன் எனப்படுவது பௌதிக மற்றும் மனித வளங்களை வினைத்திறனுடனும் பண்புசார்தரத்துடனும் பயன்படுத்தலாகும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை ஆக்கத்திறனாக மாற்றுவதற்கு ஆசிரியரின் திட்டமிடல் பாடமுன்னாயத்தம் என்பன மிகமுக்கியமானவை. வெறுமனே விரிவுரை முறை கற்பித்தலைத்தாண்டி மாணவர்களையும் ஈடுபடுத்தி கற்பிப்பதற்கு தற்போதைய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பெரிதும் உதவி புரிகின்றன. அந்தவகையில் எனது பாடசாலையில் கணினி திறன் பலகைகள், பல்லூடக எறியிகள் மற்றும் திறன் தொலைக்காட்சிப்பெட்டிகளைப் பயன்படுத்தி தினமும் கற்பித்தல் செயற்பாடுகள் அனைத்து வகுப்புக்களிற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நடைபெற்றுவருகிறது. இதனூடாக எனது பாடசாலை ஆசிரியர்கள் ஆக்கத்திறனான கற்பித்தலில் ஈடுபடுவது கண்கூடு.

ஆசிரியரானவர் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் போது தன்னுடைய அறிவு,திறன்,மனப்பாங்கினை மேம்படுத்துவதோடு மாணவர்களையும் கற்றலில் தேர்ச்சியடையச் செய்தல் வேண்டும். மேலும் வகுப்பறையும் மாணவர்களும் கவின்நிலை உடையதாக அமைவது அவசியம். இதன் மூலம் கற்றல் கற்பித்தல் வெற்றிகரமாக அமையும். வகுப்பறை அலங்கரிப்பு அவசியம். சுவர்களில் கற்றலுக்கு தேவையான காட்சிப்படங்களை நேர்த்தியாகக்காட்சிப்படுத்தல் மற்றும் மாணவர்கள் சிந்தித்து விளையாட்டுடன் கூடிய வகையில் கற்பதற்கான செயல்அட்டைகளை தயாரித்து வைத்திருத்தல் போன்றனவும் மாணவர்களை கற்றலில் முழு ஈடுபாட்டுடன் ஈடுபட வழிவகுக்கும்.

வகுப்பறை நேரமுகாமைத்துவம், காற்றோட்டமுள்ள அமைதியான கற்றலுக்கு ஏற்பான சூழலில் அமைந்த வகுப்பறைகள் என்பவற்றை சரியாக கையாளும் ஆளுமையுள்ள ஆசிரியர்கள் சிறந்த ஆக்கத்திறனுள்ளவர்களாக மாணவர்களின் கல்வி அடைவிற்கு பெரிதும் துணைநிற்பார்கள்.

LIVEWORKSHEETS

**02. ஆக்கத்திறன் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு உங்கள் பாடசாலையோடு தொடர்புபடுத்தி ஆராய்க?**

உற்பத்தித்திறன் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை எனது பாடசாலையோடு தொடர்புபடுத்தி நோக்குவோமாயின், பாடசாலைச் சுற்றுச்சூழல் பொருத்தமாக அமைதல் வேண்டும். ஒளி கிடைக்கக்கூடியதாக தேவையற்ற சத்தங்கள், இடையூறுகள் ஏற்படாது இருத்தல் சிறப்பு. பாடசாலை அருகில் ஆலயம் அமைந்தால் அங்கு ஒலிக்கும் பாட்டு சத்தம் மாணவர்களின் கற்றலுக்கு இடையூறாக அமையும். நகர்ப்புறப் பாடசாலைகளில் வாகன இரைச்சல் அதிகமாகக் காணப்படும். எனது பாடசாலை கிராமப்புறப் பாடசாலை ஆகையால் சுற்றுச்சூழல் கற்பதற்கு எதுவாகக் காணப்படுகின்றது.

அடுத்ததாக பாடசாலை வேலைத்திட்டங்கள் எனது பாடசாலை அதிபரால் சகல ஆசிரியர்களுக்கும் முகாமைத்துவக் குழுக்களாகப் பிரிக்கபட்டு சமமாக வழங்கப்படுகின்றது. அத்தோடு கற்பித்தல் மேற்பார்வை செய்வது போல் நிர்வாகச் செயற்பாடுகளும் நடைபெறுகின்றதா என மேற்பார்வை செய்யப்படுகின்றது. ஆகவே இச் செயற்பாடு ஆக்கத்திறன் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தி சிறந்த விளைதிறனை எனது பாடசாலைக்குப் பெற்றுத் தருகின்றது.

எனது பாடசாலையில் பணியாற்றும் ஊழியர்களில் அதிகமானோர் தூர இடங்களில் இருந்து வந்து கற்பிக்கின்றார்கள். அவர்களின் மனநிலை, சூழ்நிலையைப் புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்பு, வேலைப்பகிர்வு பேணப்படுகின்றது. அவர்களின் போக்குவரத்து சிரமங்களைக் குறைக்க விசேட விடுதி, பேரூந்து செல்லும் நேரத்திற்கேற்றவாறு அவர்களை விடுவித்தல் செய்யப்படுகின்றது. ஆகவே ஆசிரியர்கள் மனத்திருப்தியோடு பணி புரிகின்ற நிலைமை எனது பாடசாலையில் நிலவுகின்றது.

அத்தோடு மாதாந்த ஆசிரியர் கூட்டம், விசேட கூட்டங்கள் தேவையேற்படின் நிகழ்த்தப்படுகின்றது. இதன்போது ஆசிரியர்களின் குறை, நிறைகள் என்பன கலந்துரையாடி தீர்க்கப்படுகின்றது. பாராட்டு ஊக்குவிப்புகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது. இச்செயற்பாடு ஆசிரியர் மென்மேலும் ஊக்கப்படுத்த உதவுகின்றது. இவை ஆக்கத்திறனை மேம்படுத்துவதாக உள்ளன. நிர்வாகத்துடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளாக சமூகத்துடனான சுமுகமான தொடர்பு, பழைய மாணவர் சங்கங்களுடன் இணைந்து பாடசாலையின் மேம்பாடுகள், சமூகத்துடன் தொடர்புடைய ஏனைய நிகழ்வுகள் ஆக்கத்திறனான செயற்பாட்டிற்கு வழிவகுத்துநிற்கின்றது.

விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள், சித்திரப் போட்டி போன்ற இணைபாட விதான செயற்பாடுகளில் எமது பாடசாலை மாணவர்கள் குழு ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், உடல், உள மகிழ்ச்சி, ஆரோக்கியம், திறமைகளை வெளிக்கொணர்தல் போன்ற பண்புகளை வளர்க்கின்றனர். நலனோம்பல் வளங்களும் பாடசாலையில் காணப்படுகின றது. மாணவர்களுக்கு ஏதாவது வருத்தம் ஏற்படின் மருத்துவ வசதி கொண்ட அறைகள் காணப்படுகின்றது. ஆய்வுகூட வசதிகள் காணப்படுகின்றது. தமது வகுப்பில் மாணவர்கள் வெறுமனே புத்தகப் பூச்சிகளாக வளராது ஆராய்ச்சி முறையிலான கற்றல் வசதிகள் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களால் சிறந்த பெறுபேற்றை பெறமுடிகின்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஆக்கத்தறன் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக காணப்படுகின்றது.

LIVEWORKSHEETS

**03. பாடசாலையில் தரவட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தலில் ஆசிரியரின் வகிபாகம் குறித்து விளக்கி, உங்கள் பாட மேம்பாட்டுக்காக நடைமுறைப்படுத்தக்கூடிய தரவட்டம் ஒன்றினை தரவட்டச் செயன்முறையில் விளக்குக?**

பாடசாலையில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவரும் தன்னார்வத்தோடு தாமாகவே முன்வந்து ஒரு குழுவாகச் சேர்ந்து வாரத்தில் ஒருநாள் தவறாமல் கூடி பாடசாலையின் தரம், விருத்தி பற்றியும் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றியும் கலந்துரையாடியும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவும் முனையும் செயற்பாடே தரவட்டமாகும். பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டின் விருத்திக்காகவும் ஆசிரியர்கள் தமது உள்ளார்ந்த சக்தியை வெளிப்படுத்துவதற்கான நுட்பமே தரவட்டமாகும். தரவட்டமானது பாட ரீதியாக, வகுப்பு ரீதியாக, ஆசிரியர் ரீதியாக, பாடசாலை ரீதியாக அமையலாம். இவ்வாறு பல்வேறு தரவட்டக் குழுக்கள் பாடசாலையில் காணப்படலாம். ஒவ்வொரு ஆசிரியரும் தரவட்டத்திற்கான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து பிரச்சினைகளை இனங்கண்டு பிரச்சினைகளிற்கான தீர்வை குழுவாக ஒன்றிணைந்து கலந்தாலோசித்து பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக ஒரு பிரச்சினையைத் தரவட்டத்தின் படி அணுகிய விதத்தினை இங்கு நோக்கலாம். பாடசாலைக்குத் தொடர்ச்சியாக ஒரு பெண்பிள்ளை பிந்தி வருகின்றமையை அவதானித்த பிள்ளையினது வகுப்பாசிரியர் அம் மாணவியை அழைத்து அதற்கான காரணத்தை விசாரித்தும், அவதானித்தும், நேரடியாக வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் வினவியும் தரவுகளை சேமிக்கின்றார். குறிப்பெடுத்த விடயங்கள் கீழ்வருமாறு,

- துவிச்சக்கர வண்டி வாங்க முடியாத வறுமை.
- தந்தை இன்மை. தாயின் அரவணைப்பில் வாழ்தல்.
- தாய் நாளாந்த கூலித்தொழில் செய்பவர்.
- நடந்துவர ஏறத்தாழ 1 மணித்தியாலம் எடுக்கும்.
- பேரூந்து வசதியற்ற ஒற்றையடிப் பாதை.
- காடுகள் காணப்படுவதால் பெண் பிள்ளையாகையால் பாதுகாப்புப் பிரச்சினை.

இப் பிரச்சினைகள் எல்லாம் வறுமையாலேயே ஏற்பட்டன. இதனை தரவட்டத்தினூடாக சக ஆசிரியர்களுக்கு புரியும்படி கலந்தாலோசித்து தீர்க்கமான முடிவாக துவிச்சக்கர வண்டி ஒன்று வறுமைப்பட்ட மாணவர்களுக்கு உதவும் அன்பர்களினால் வழங்கி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மீண்டும் அவதானித்த போது துவிச்சக்கர வண்டியில் குறித்த மாணவி நேரத்துடன் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

எனது பாட மேம்பாட்டிற்கான தரவட்டத்தினை நோக்கும்போது முதலில் பிரச்சனையை இனங்காணுதல் வேண்டும். எனது பிரச்சினையாக எனது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை மாணவர்கள் விரும்பி கற்றுக்கொள்ள வந்தாலும், அதற்கான அடிப்படை அறிவு மற்றும் அடிப்படை வசதிகள் அவர்களது குடும்பங்களில் சரியான முறையில் அமையவில்லை. எனது பாடசாலை அதிகஸ்ட பிரதேசத்தில் அமைந்துள்ளமையால் அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதிகள் மற்றும் பாடசாலை நேரத்திற்கு பின்னராக கற்றலில் ஈடுபட கணனி வசதிகள் காணப்படவில்லை. இதுதொடர்பான தரவட்டத்தில் ஆராய்ந்த போது வெளிநாட்டில் இருக்கும் மருத்துவர் ஊடாக கணினி இலவச வகுப்புக்களை மாணவர்களிற்கு வழங்கக்கூடியதான ஏற்பாடுகள் ஒரு ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஓரளவு பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் மாணவர்களிற்கு கணினி அறிவு கிடைக்கக் கூடியதாக அமைந்தது தரவட்டத்தின் மூலமேயாகும். நான் தனியாக செயற்பட்டிருந்தால் இந்த ஆலோசனை பிறிதொரு ஆசிரியர் மூலம் எனக்கு கிடைக்காது போயிருக்கும்.

LIVEWORKSHEETS

**04. 5s எண்ணக்கருவினை விளங்கி பாடசாலையில் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டம்**

பாடசாலை உன்னத நிலையை அடைவதற்கு பல்வேறு வழிமுறைகள், செயற்பாடுகள், திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் 5s எண்ணக்கருவும் ஒன்றாகும். 5s எண்ணக்கரு ஜப்பானிய வார்த்தைகளாலே முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டது. அவ் ஜப்பானிய வார்த்தைகள் செய்ரி, செய்தோன், செய்சோ, செய்கெற்சு, சிட்சுகே ஆகும். அவற்றின் தமிழ் வடிவங்கள் முறையே அப்புறப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், சுத்தம் செய்தல், நிர்ணயித்தல், பயிற்சியும் கட்டுப்பாடும் ஆகும்.

அந்த வகையில் செய்ரி எனப்படுவது தேவையற்ற பொருட்களை வகைப்படுத்தலும் அப்புறப்படுத்தலும் ஆகும். செய்தோன் எனப்படுவது தேவையுள்ள பொருட்களை ஒழுங்காக வைத்தல் அதாவது பொருட்கள் குறித்த இடத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டு தேவைப்படும் நேரத்தில் இலகுவாக எடுத்து பயன்படுத்தக் கூடியதாக அடையாளமிடப்பட்டு இருத்தல் ஆகும். செய்சோ எனப்படுவது சுத்தம் செய்தலாகும். செய்சோவின் மூலம் பாடசாலையில் மகிழ்ச்சியாகப் பணியாற்ற முடியும். மற்றும் மாணவர்கள் கற்றலை ஆர்வத்துடன் கற்பார்கள். செய்கெற்சு எனப்படுவது நிர்யணம் செய்தலாகும். அதாவது மேற்படி மூன்றையும் சரியாகப் புரிந்து நடைமுறைப்படுத்தலாகும். சிட்சுகே எனப்படுவது பயிற்சியும் கட்டுப்பாடும் ஆகும். அதாவது ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் விதிகளைக் கடைப்பிடித்து நடத்தல் நிறுவன முன்னேற்றத்திற்கு காரணமாக இருத்தல் என்பவற்றைக் குறிப்பிடுபவையாகும்.

பாடசாலையில் எவ்வாறு 5s இனை நடைமுறைப்படுத்துவது அதற்கு ஆற்ற வேண்டிய கருமங்கள் என்ன என நோக்குவோமாயின் பாடசாலையின் தேவையான வளங்களை உரிய இடத்தில் பொருத்தமானவாறு வைத்து தேவையற்ற பொருட்கள்இ உடைந்த மேசை,கதிரைகளை அப்புறப்படுத்தல். தேவையற்ற பொருட்களை அதற்குரிய இடத்தில் களஞ்சியப்படுத்தி மீள்சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துதல். பாடசாலையில் காணப்படும் வளங்களிற்கு இடத்தினை ஒதுக்குதல். வகுப்பறைகளைத் தனித்தனியாக அமைத்து வகுப்பறைகளை ஒழுங்கமைத்தல். பாடசாலையின் அலுவலகம், வகுப்பறை, நூலகம், கணித,விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி அறை, மொழித்திறன் அறை என்பவற்றினை குறித்த ஒழுங்குமுறையில் அதனை ஒழுங்கமைத்துப் பேணல். பொருட்களை உரிய இடத்தில் வைத்து பொருட்களிற்கான அடையாளம், அம்புக்குறி இடப்பட்டு சரியான முறையில் பேணல். அலுவலங்களில் காணப்படும் ஆவணங்களைச் சரியான முறையில் ஒழுங்கமைத்துப் பேணுதல் வேண்டும்.

பாடசாலையின் சூழலினை சுத்தமாக வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை சரியான முறையில் ஒழுங்கமைத்துப் பேணல். பூங்கன்றுகளை நாட்டிப் பராமரித்தல். ஒவ்வொரு நாளும் வகுப்பறை, பாடசாலை முற்றம் என்பவற்றைச் சுத்தம் செய்து பேணல். வகுப்பறையில் பொருத்தமானவாறு ஒழுங்கமைத்துச் சுத்தம் செய்தல். இவ்வாறாகப் பாடசாலையைச் சுத்தமாக வைத்திருந்தால் பாடசாலைச்சூழல் மகிழ்ச்சியாகக் காணப்படுவது மாத்திரமன்றி கற்றல்-கற்பித்தலினை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம். பாடசாலையின் ஒழுக்கக்கோவையைப் பின்பற்றி கட்டுப்பாடுகளுடன் விதிகளைக் கடைப்பிடித்து பாடசாலையினைத் தரமானதாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ஆசிரியர்கள் பொருத்தமானவாறு ஒழுக்கக் கோவைகளைப் பின்பற்றல். மாணவர்களும் பொருத்தமானவாறு ஒரே மாதிரி பாடசாலைக்கு உரிய நேரத்தில் வருகை தரல், பாடசாலைக் செயற்பாடுகளை நேரமுகாமைத்துவத்திற்கு அமையக் கடைப்பிடிக்க வழிகாட்டுதல். இவ்வாறாக பாடசாலையில் 5sஎண்ணக்கருவினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி பாடசாலையினை உன்னத நிலைக்கு உயர்த்த முடியும்.

LIVEWORKSHEETS